பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 21 புதன்கிழமை 04.01.2023 கதிர் 60

இனி அது ரகசியம் அல்ல!

சபாஷ் சரியான சந்தர்ப்பம்...! உள்ளூராட்சி தேர்தல் நடக்க அனுமதிக்கப்பட்டால், இன்னும் இரண்டு வாரங்களில் - 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை - வேட்பு மனு தாக்கல்.

இந்தச் சமயத்தில்தான் கூட்ட மைப்பின் பிரதான 2

# வேட்புமனு ஏற்பது குறித்து இன்று பகிரங்க அறிவிப்பு!

## 19 ஆம் திகதி தொடக்கம் 23 வரை மூன்றரை நாள்கள் கால அவகாசம்

(ந.லோகதயாளன்)


கொழும்பு,ஜனவரி 04

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான அறிவிப்பு இன்று சம்பந்தப்பட்ட மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் ஊடாக வெளியிடப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

அறிவிப்பு வெளியிடப்பட்டு 14 நாள்களின் பின்னர் வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். வேட்பு மனு தாக்கலுக்கு மூன்றரை நாள்கள் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். 2




## தேர்தலை ரத்துச் செய்யுமாறு உத்தரவிடும்படி கோரி வழக்கு



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மார்ச் 10 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தீர்மானத்தை ரத்து செய்யக் கோரி உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற் கேணல் டபிள்யூ.எம்.ஆர். விஜேசுந்தர என்ற மனுதாரர் தேர்தல்கள் 2

## யாழ். - கொழும்பு ரயில் சேவை இன்று இரவுடன் இடைநிறுத்தம்

### மாற்றுப் பயண ஒழுங்குகள் குறித்து விளக்கம்



(இ.கலையமுதன்)

கொழும்பு - யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை இன்று இரவுடன் தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளதால் அதை யொட்டி மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றுப் போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பாக வடமாகாண வீதிப்பயணிகள் போக்கு வரத்து அதிகார சபை தலைவர் இ.இரவீந்திரன் தெளிவுபடுத்தினார். 2

## மட்டு. தரவை துயிலும் இல்லம் படை ஆக்கிரமிக்கும் ஆபத்து

### ஆட்சேபித்து இன்று ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லம் இராணுவத்தினரால் ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப் படுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுவருவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமுமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். 10

## சிகரெட், மதுபானம் வரி இருபது வீதம் அதிகரிப்பு

நேற்று நள்ளிரவு முதல் அனைத்து வகை மதுபானங்களுக்கான வரியை 20 வீதம் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிகரெட் மீதான வரியையும் 20 வீதம் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 10

## விமானப்படையின் தளபதிக்கு ஆறு மாத கால சேவை நீடிப்பு!



இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவின் பதவிக்காலத்தை ஆயுதப்படைகளின் பிரதானிஎன்றவகையில் ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க ஆறு மாதங்களுக்கு நீடித்துள்ளார்.

நவம்பர் 2, 2020 அன்று, விமானப்படையின் 18 ஆவது தளபதியாக எயார் மார்ஷல் பத்திரன அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டார்.

தளபதியின் பதவிக்காலம் டிசம்பர் 30, 2022 முதல் ஆறு மாதங்களுக்கு 10

## ஆடைத் தொழிலாளர்கள் 114 பேர் உணவு விஷமாகி ஆஸ்பத்திரியில்!

உணவு விமானதன் காரணமாக ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் 114 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 10

## பொலிஸில் 2ஆம் நிலைக்கு நிலாந்த ஜயவர்தன உயர்வு!



நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நிலாந்த ஜயவர்தன நிர்வாகத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ் 10

## மின் வழங்கல்,பெற்றோலியம்,மருத்துவம் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனம்

மின்சாரம், பெற்றோலியம் மற்றும் வைத்திய சாலை சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அத்தியாவசிய பொது சேவைகள் சட்டத்தின் இரண்டாம் பிரிவிற்கு அமைய இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கிணங்க -

1. மின்சாரம் வழங்கல் தொடர்பான சகல வேலைகள்

2. பெற்றோலிய உற்பத்திகள் - எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம்,


3. வைத்தியசாலைகள், மருந்தகங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களில் நோயாளர்களின் பராமரிப்பு, வரவேற்பு, பாதுகாப்பு, சிகிச்சையளித்தல்

- ஆகியன அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

### நாய் மீது பாலியல் துஷ்பிரயோகம்:

## ஆஷூ மாரசிங்கவின் முறைப்பாடு: ஆதர்ஷா முன் பிணை கோரி மனு





ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகர் பேராசிரியர் ஆஷூ மாரசிங்கவுக்கு எதிராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுடன் இணைந்து ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய ஆதர்ா கரந்தன என்ற பெண் ஆஷூ மாரசிங்க செய்த 10

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்காளிக் கட்சியான இலங்கை தமிழரசுக்கு 'செக்' வைப்பதாக நினைத்துக் கொண்டு, காலக்கெடுவுடன் கூடிய நிபந்தனைகளை விதித்திருக்கின்றன ரெலோவும் புளொட்டும்.

கூட்டமைப்பைப் பதிய வேண்டும், பொதுச்சின்னத்தில்தான் போட்டி, ஏனைய தமிழ்க் கட்சிகளையும் சேர்த்து பரந்துபட்ட கூட்டாக வேண்டும் – என்றெல்லாம் நிபந்தனைகள் – அதுவும், அதுபற்றிய இணக்கத்தை, முடிவை,தெரிவிக்க ஒரு வார காலக்கெடுவுடன்.

தமிழரசின் மத்தியகுழுகூட்டம் இன்னும் மூன்று நாள்களில் மட்டக்களப்பில். அப்போது இந்த நிபந்தனைகள், காலக்கெடு எல்லாம் தமிழரசால் தூக்கிக் கடாசப்படும் என்பதுதான் நிலைமை.

சம்பந்தனையும் மாவையையும் ரெலோவும் புளொட்டும் என்ன நெருக்டிக்குள் போட்டாலும் – அல்லது அவர்களைத் தாஜா பண்ணி, சரி செய்தாலும் – தமிழரசின் அடுத்த மட்டத் தலைமை இம்முறை அசைந்து கொடுக்க மாட்டாது. ரெலோவுக்கும் புளொட்டுக்கும் சரியான பிரதிபலிப்பைக்காட்டியேதீரும்என்கின்றன தமிழரசு வட்டாரங்கள்.

தமிழரசுக்குள் அடுத்த தலைமைத்துவத்துக்காக தமக்குள் போட்டி போடக் கூடிய ஸ்ரீதரனும், சுமந்திரனும் – ஏன் சிவஞானமும் கூட – மற்றைய இரு பங்காளி கட்சிகளையும் சரியான இடத்தில் வைக்க வேண்டும் என்பதில் மிகவும் கரிசனையாகவும் தீவிரமாகவும் ஒத்த நிலைப்பாட்டிலும் இருக்கின்றனர் என்று தெரிகின்றது.

ஆங்கிலத்தில் **Rub the wrong way** என்பார்கள். எரிச்சல், கோபம், சீற்றம் வரத் தவறான முறையில் தூண்டுவது – உரசுவது – என்று இதனை கூறலாம். தவறான முறையில் மட்டுமல்ல, தவறான சந்தர்ப்பத்திலும் உரசி இருக்கின்றன ரெலோவும் புளொட்டும்.

திட்டமிட்டபடி உள்ளூராட்சி தேர்தல் நடக்குமானால் –

ரெலோவும் புளொட்டும் தத்துமது அதிகப் பிரசங்கித்தனமான நிபந்தனைகளைத் தொடர்ந்தும் தூக்கிப் பிடிக்குமானால் –

இந்த முறை தேர்தலை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் தனித்தனியாகத்தான் எதிர்கொள்ள வேண்டி நேரும் – தமிழரசுக்குள் பலரும் விரும்பி, எதிர்பார்த்திருக்கின்றமை போல.

அதுவும் கூட நல்லதுதான். சில சமயங்களில் அப்படி பிரிந்து நின்று தேர்தலில் போட்டியிட்டால், இந்த 60க்கு 40 என்ற விகிதாசாரத் தேர்தல் முறையில் தனித்தனியாக அதிக ஆசனங்களை வெல்லும் வாய்ப்பு உண்டு.

ஏதோ மூன்று கட்சிகளாகவோ அல்லது ஆறு கட்சிகளாகவோ அவற்றின் தலைவர் தாமே என்ற அடிப்படையை வைத்திருந்தால்தான், கொழும்பில் தமது அரசியல் ஓடும் என்பதற்காக எதற்கும் தலையாட்ட வேண்டிய கட்டாயம் சம்பந்தனுக்கு.

சொந்தக் கட்சிக்குள் செல்வாக்கு சீர்கெட்டு விட்டதால் பங்காளி கட்சிகள் தரும் 'செயற்கை மதிப்பில்' தான் மாவையரின் அரசியல் ஓடுகின்றது.

இவர்கள் இருவரையும் அழைத்து, மடக்கிக் கொண்டு காரியமாற்றலாம், காய் நகர்த்தலாம் என ரெலோவும் புளொட்டும் இப்போதும் நம்பினால், அது மனப்பால் குடித்த கதைதான்.

தமிழரசின் அடுத்த மட்ட தலைமை இந்த விடயத்தில் எப்போதோ உஷாராகி விட்டது. விளைவுகளை இனிப்பார்க்கலாம்.

***

வடக்கு ஆளுநரின் வழிகாட்டலின் பேரில், யாழ் மாநகர சபை அங்கத்தவர்களை ஆளுநரின் செயலாளர் சந்திக்கின்றார். அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களை அப்படிக் கூட்டத்துக்கு அழைக்கும் அதிகாரம் ஆளுநரின் செயலாளருக்கு இருக்கின்றதா? தெரியவில்லை. கட்சிகள் அதைப் பார்த்துக் கொள்ளட்டும். நமக்கேன் வீண் வம்பு? அதை விட்டுவிடுவோமாக!

ஆனால், இந்தக் கூட்டத்திற்கான அழைப்புத் தொடர்பாக எனக்கு வேறு சில சந்தேகங்கள் உண்டு. யாழ் மாநகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் அனைவருக்கும் – 16 பேருக்கும் – இந்தச் சந்திப்புக்கான அழைப்பு யாழ் மாநகர சபை ஆணையாளர் ஊடாகக் கிடைத்துள்ளது.

அவர்கள் தமிழரசு, ரெலோ, புளொட்டைச் சேர்ந்தவர்கள. தமிழ் தேசிய கூட்டமைப்பினர். ஆனாலும், அவர்கள் அனைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில்தான் மாநகர சபை தேர்தலில் களமிறங்கியிருந்தார்கள்.

ஆகவே அவர்களுக்குத் தான் அனுப்பிய கடிதத்தில், ஒவ்வொருவரையும் 'இலங்கைத் தமிழரசு கட்சி உறுப்பினர்' என்று தான் குறிப்பிட்டுள்ளார் மாநகர ஆணையாளர். அது தப்பில்லை.

அப்படிப் பார்த்தால் கஜேந்திரகுமார் அணியினர் அனைவரும் – மணிவண்ணன் உட்பட – கடந்த உள்ளூராட்சி தேர்தலில் களம் இறங்கிய அனைவரும் – 'அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்' என்ற கட்சியின் பெயரில்தான் போட்டியிட்டு வென்றனர். ஆனால் அவர்களுக்கு மட்டும் 'தமிழ் தேசிய மக்கள் முன்னணி' என்ற பெயரில் அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது.

ஏன் இந்த முரண்பாடு? தாம் 'அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்' சார்ந்தவர் அல்லர். 'தமிழ் தேசிய மக்கள் முன்னணி' என்று முன்னாள் மேயர் மணிவண்ணன் வழக்கமாக வியாக்கியானம் கூறி வந்தமையால், இந்த ஒழுங்கா? தெரியவில்லை. சம்பந்தப்பட்டோர் தெளிவுபடுத்தினால் நல்லது.

**- மின்னல் -**

## வேட்புமனு ஏற்பது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான அறிவிப்பு இன்று வெளியிடப்படுமானால் பெரும்பாலும்

19,20,21 மற்றும் 23 நண்பகல் வரையான மூன்றரை வேலை நாள்கள் வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்று மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் ஊடாக வெளியிடப்படும் அறிவிப்பில் வேட்புமனு ஏற்கும் திகதி, இடம், பிணைத் தொகை தொடர்பான விவரம், வேட்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் பெண் பிரதிநிதித்துவம் உள்ளிட்ட விடயங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

வேட்பு மனு கையேற்ற தினத்தில் இருந்து 42 தினங்களுக்குள் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்பது விதி.

341 உள்ளூராட்சி மன்றங்களில் எல்பிட்டிய பிரதேச சபை தவிர்ந்த 340 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனு தாக்கல் தொடர்பிலேயே இன்று அறிவிப்பு வெளியிடப்படவுள்ளது.

## தேர்தலை ரத்துச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவின் தலை வர், தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள், உள் ளூராட்சி அமைச்சுக்குப் பொறுப்பான பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் பலரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.

ஒட்டுமொத்த தேசமும் எதிர்நோக்கும் இந்த நெருக்கடியான நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முயலும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தீர்மானம் பேரழிவிற்கு வழிவகுக்கும் என்றும் பொது மக்களுக்கு கூடுதல் சுமையை ஏற்படுத்துவதாகுமென்றும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தேர்தல் ஆணையத்திடம் இருந்து பெறப்பட்ட தகவல்கள், ஆண்டு வரவு – செலவுத்திட்டத்தின்படி 2023 ஆம் ஆண்டு தேர்தலை நடத்துவதற்கு குறைந்தபட்சம் ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட வேண்டும் என்று மனுதாரர் கூறினார்.

நாட்டில் தேர்தலை நடத்துவதற்கு இவ்வளவு தொகை கிடைக்குமா என்ற கேள்விக்கு, தேர்தல் ஆணையம் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில், 'வருவாய் பெறுதல் மற்றும் கடன் வாங்கும் திறன் ஆகியவற்றைப் பொறுத்தே நிதி விடுவிப்பது அமையும்' எனத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தற்போதைய சூழ்நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் மீது தேவையற்ற செல்வாக்கை செலுத்த முயற்சிக்கப்படுவதாகவும், அரசியல் நோக்கங்கள் மற்றும் நிகழ்ச்சி நிரல்களில் சீர்குலைக்கும் காரணிகள் இருப்பதாகவும் மனுதாரர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ். - கொழும்பு ரயில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இவ்விடயங்களை அவர் விவரித்தார்.

வவுனியா மற்றும் அனுராதபுரம் ஆகிய நகரங்களிற்கிடையேயான தண்டவாளப் பாதையில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளவிருப்பதால் ஜனவரி நாளை 5 ஆம் திகதியிலிருந்து இப்பாதையினூடான ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட உள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் – கொழும்பு இற்கிடையே யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பிக்கபபட்ட ரயில் சேவைகள் யாவும் அநுராதபுரத்திலிருந்து ஆரம்பித்து கொழும்பு வரை சேவையைத் தொடரும். அதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வரை யாழ்ராணி ரயில் சேவை இடம்பெறும். இதன்காரணமாக தலைமன்னார் – கொழும்பிற்கு இடையிலான ரயில் சேவையும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இக்காலத்தில் பயணிகள் பின்வரும் மூன்று வழிகளில் தமது பயணத்தை மேற்கொள்ள முடியும்:–

1.யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வரை ரயிலில் சென்று, பின்னர் வவுனியாவிலிருந்து அனுராதபுரம் வரை பஸ்ஸில் பயணித்து, பின்பு மீண்டும் அனுராதபுரத்திலிருந்து கொழும்பு வரை ரயிலில் பயணிக்க முடியும்.

2.வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலிருந்து பஸ்ஸில் அனுராதபுரம் வரை பயணித்து, பின்னர் அனுராதபுரத்திலிருந்து கொழும்பு வரை ரயிலில் பயணித்தல்.

3.யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய மாவட்டங்களிலிருந்து நேரடியாக கொழும்பிற்கு பஸ்ஸில் பயணித்தல்.

– மேற்குறித்த மூன்று வழிகளையும் அடிப்படையாக வைத்து ஆளுநரின் வழிநடத்தலின் கீழ் வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, இலங்கை போக்குவரத்து சபை, இலங்கை ரயில்வேத் திணைக்களம் மற்றும் தனியார் பஸ் உரிமையாளர்களின் பங்களிப்புடன் பின்வரும் மேலதிக போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதிசொகுசு, சொகுசு, அரைசொகுசு பஸ்கள் உள்ளடங்கலாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் வழி அனுமதிப்பத்திரம் பெற்ற 38 பஸ்கள் தற்போது யாழ் – கொழும்பு வழித்தடத்தில் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றன. பயணிகள் இவற்றிற்கான ஆசனப் பதிவுகளை மேற்கொள்வதற்கான வழிகள் இலகுபடுத்தப்பட்டுள்ளன.

பயணிகளின் மேலதிக கேள்விக்கு ஏற்ப பஸ்கள் சேவைகளை வழங்கக்கூடிய வகையில் இலங்கை போக்குவரத்து சபையின் வடமாகாணத்தில் உள்ள எல்லா டிப்போ சாலைகளில் இருந்தும் அனுராதபுரத்திற்கான சேவையை மேற்கொள்வதற்காக இலங்கை போக்குவரத்து சபையின் 28 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளன.

(10ஆம் பக்கம் பார்க்க)






# நாட்டின் ரயில் சேவை குறைக்கப்பட்டமைக்கு பொது முகாமையாளரே பொறுப்புக்கூறவேண்டும்

## பாலித்த ரங்கே பண்டார சாடல்



ரயில்சேவைமட்டுப்படுத்தப்பட்டமைக்கு அரசாங்கத்தைக் குறைகூறுவதில் பயனில்லை. ரயில் திணைக்கள பொது முகாமையாளரே இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையக மானசிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

ரயில் ஊழியர்களின் பற்றாக்குறை காரணமாகரயில்சேவைமட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மேற்கொள்ள முடியும் என ரயில் சேவை பிரிவு அறிவித்திருந்தது.

அரச ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதை 60 ஆக அரசாங்கம் தீர்மானித்திருந்தது. அதன் பிரகாரம் ரயில் திணைக்களத்தில் பலர் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளனர்.

இதன் காரணமாக ரயில் சேவையின் ஒருநாளைக்கு மேற்கொள்ளப்படும் ரயில் பயணம் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை அரசாங்கம் தீர்மானிக்கும்போது, அரச நிறுவனங்கள் திணைக்களங்களில் இருந்து ஓய்வு பெறுபவர்களின் எண்ணிக்கை, அவர்கள் இதுவரை செய்துவந்த பணி, அவர்கள் ஓய்வுபெற்றுச்சென்றால் அந்த சேவையை மேற்கொள்ள மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய பொறுப்பு அந்தத் திணைக்களத்தின் பொதுமுகாமையாளருக்கே இருக்கின்றது.

ரயில்வேத் திணைக்களத்தின் ரயில் சாரதிகள் இத்தனைபேர் ஓய்வு பெற்றுச் செல்கின்றமை பொது முகாமையாளருக்கு தெரியாதா? அவர்கள் அந்த சேவைக்கு தற்போது கட்டாயம் தேவை என்றிருந்தால், அது தொடர்பாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடி, அவர்களின் சேவைக்காலத்தை குறிப்பிட்டதொரு காலத்துக்கு நீடித்துக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும்.

அவ்வாறு செய்யாமல், இறுதி நேரத்தில், ஊழியர் இல்லாமையால் ரயில் பயணம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருப்பதால் பயணிகளும் சிரமத்துக்கு ஆளாகி இருப்பதுடன் அரசாங்கமும் நிர்க்கதிநிலைக்குதள்ளப்படுகின்றது. அதனால் ரயில் சேவை மட்டுப்படுத்தப்பட்டதால் பயணிகள் எதிர் கொண்டுள்ள சிரமத்துக்கு ரயில்வேத்திணைக்களத்தின் பொது முகாமையாளரே பொறுப்புக்கூற வேண்டும். இந்த விடயத்தில் அரசாங்கத்தைக் குறை கூறுவதில் பய னில்லை. – என்றார்.

# கோட்டாவின் நிலைமையே காஞ்சனவிற்கும் ஏற்படும்!

## எச்சரிக்கிறார் நளின் பண்டார



மின் கட்டணம் மீண்டும் அதிகரிக்கப்பட்டால் தொழிற்துறைகள் முற்றாக வீழ்ச்சியடையும். எதிர்ப்புக்களை மீறி கட்டணத்தை அதிகரிப்பதற்கு அமைச்சர் காஞ்சன விஜேசேகர நடவடிக்கை எடுத்தால், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிலைமையே அவருக்கும் ஏற்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவிகள் தொடர்ந்தும் தாமதமாகிக் கொண்டிருக்கின்றன. இதற்கான காரணம் மக்களின் நம்பிக்கையை இழந்துள்ள அரசாங்கத்தின் ஆட்சியாகும்.

எனவே சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிகள் விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது. பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கான சர்வதேச உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், மக்கள் விரும்பும் அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.

எனவே இவ்வாண்டு நடத்தப்பட வேண்டிய தேர்தல்கள் உரிய நேரத்தில் இடம்பெற வேண்டும். தேர்தலை நடத்துவதற்கு டொலர்கள் தேவையில்லை.

இலங்கை ரூபாவிலேயே தேர்தல் செலவுகள் மேற்கொள்ளப்படும். இதற்காக நிதி இவ்வாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே அரசாங்கம் நிதி இல்லை என பொய் கூறி தேர்தலைக் காலம் தாழ்த்த முயற்சிக்கக் கூடாது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மாத்திரமின்றி, அரசாங்கம் முயற்சித்தால் மாகாணசபைத் தேர்தலையும் நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்த முடியும்.

ஜனாதிபதி விரும்பினால் விரைவில் நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்த முடியும். நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால் மாத்திரமே நாட்டிலுள்ள சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும்.

தற்போது மீண்டும் மின் கட்டணத்தை அதிகரிக்கவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. நிலக்கரி இறக்குமதியில் இடம்பெறும் மோசடிகளை முகாமைத்துவம் செய்தால் மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய தேவையோ அல்லது மின்சாரத்தை துண்டிக்க வேண்டிய தேவை யோ ஏற்படாது. சட்டத்தின்படி மின் கட்டணத்தை அதிகரிக்கும் அதிகாரம் அமைச்சருக்கு கிடையாது.

அமைச்சர் காஞ்சன விஜேசேகர, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் அப்பாற்பட்டவரைப் போன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

அவர் குறிப்பிடுவதைப் போன்று மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டால், தொழிற்துறைகள் முற்றாக வீழ்ச்சியடையும். இது பொருளாதார நெருக்கடியில் கடுமையான தாக்கத்தை செலுத்தும்.

மாறாக எதிர்ப்புக்களை மீறி மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு ஏற்பட்ட நிலைமையைப் போன்று, அமைச்சர் காஞ்சன விஜேசேகரவிற்கும் மோசமானதொரு நிலைமை ஏற்படக் கூடும். மீண்டுமொரு கிளர்ச்சி போராட்டத்தை நடத்துவதற்கு மக்கள் அஞ்சமாட்டார்கள். – என்றார்.

# 27 அரசியல் கட்சிகளுடன் நாம் பரந்துபட்ட கூட்டணி அமைப்பு!

## இல்லாவிட்டால் தோல்வி என்கிறார் தயாசிறி



உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் சிறந்த வெற்றியைப் பெற்றுக் கொள்வதற்காக இதுவரையில் 27 அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்களுடன் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மக்களின் நிலைப்பாட்டுக்கமைய இவ்வாண்டு புதிய ஆட்சி அமைக்கப்படுவதற்கு அரசாங்கம் இடமளிக்க வேண்டும் என்று ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சு.க. அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாட்டிலுள்ள முன்னணி அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்களுடன் இணைந்து கூட்டணியமைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் எடுப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம். மக்களின் உண்மையான நிலைப்பாடுகளுக்கமைய ஆட்சியமைக்கப்பட வேண்டும். அதற்கு இந்த வருடத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

நாட்டில் கிளர்ச்சிகள் ஏற்பட்டதன் பின்னர் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டிருந்தால் இன்று பல்வேறு நெருக்கடிகளுக்குத் தீர்வு கண்டிருக்க முடியும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு 100 கோடி செலவுகள் ஏற்படும் என்று தேர்தல் ஆணைக்குழு மதிப்பிட்டுள்ளது.

அந்த நிதி இவ்வாண்டுக்கான வரவு – செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே நிதி இல்லை என்பதை அரசாங்கம் காரணமாகக் கூற முடியாது.

சுதந்திரக் கட்சியின் பெயரைப் பயன்படுத்திக்கொண்டு அரசாங்கத்தில் இணைந்தவர்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

சுதந்திரக் கட்சியின் கொள்கையைப் பின்பற்றாதவர்களே இவ்வாறு செயற்படுகின்றனர். இவர்கள் தமது அமைச்சுப் பதவிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே இவ்வாறு செயற்படுகின்றனர்.

எவ்வாறிருப்பினும் இவர்கள் தமது அமைச்சுப்பதவிகளைத் துறந்து, மீண்டும் எம்முடன் இணையவிரும்பினால் அதனை நாம் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வோம்.

முற்போக்கான கூட்டணியொன்றை அமைப்பதற்காக இதுவரையில் 27 அரசியல் கட்சிகள், அமைப்புக்கள் என்பவற்றுடன் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் தேர்தலில் சிறந்த வெற்றிகளைப் பதிவு செய்வோம். – என்றார்.

# நாட்டின் சட்டக் கல்லூரிக் கற்கைகள் ஆங்கில மொழியில்; எதிர்த்து தாக்கல்செய்யப்பட்ட எழுத்தாணை மனு நிராகரிப்பு

இலங்கைசட்டக்கல்லூரியின்அனைத்து கற்கைநெறிகளையும்ஆங்கில மொழியில் நடத்துவதற்கும், பரீட்சைகளைபடிப்படியாக ஆங்கில மொழியில் நடத்துவதற்கும் சட்டக் கல்விப் பேரவை எடுத்துள்ள தீர்மானத்தை எதிர்த்துதாக்கல்செய்யப்பட்ட எழுத்தாணை (ரிட்) மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விசாரணைக்கு ஏற்காது நிராகரிக்கப்பட்டுள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்றின் நீதிபதிகளான தம்மிக கனேபொல மற்றும் சோபித்த ராஜகருணா ஆகியோர் அடங்கிய குழாம் இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கடந்த 30.12.2020 அன்று வெளியிடப்பட்ட 2208/13 என்ற அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக சட்டக் கல்வி பேரவையால் பிரகடனப்படுத்தப்பட்ட விதிகளை ரத்து செய்யுமாறு கோரி, இலங்கை சட்டக் கல்லூரியின் மாணவன் மங்கள புஷ்ப குமார என்பவரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் பெருவெற்றி பெற்றுள்ளோம்!

## கமல் குணரட்ண பெருமிதம்



பாதுகாப்பு அமைச்சு பொலிஸ் மற்றும் ஏனைய தரப்பினருடன் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கைகள் காரணமாக போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளை பெருமளவிற்கு கட்டுப்படுத்த முடிந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரட்ண தெரிவித்துள்ளார். போதைப்பொருள் கடத்தலை முறியடிப்பதற்கான நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளதன் காரணமாக சமூகத்தில் பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமூக அமைதியின்மையின் போது பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் அத்தியாவசிய சேவைகள் விநியோகம் போன்றவற்றை உறுதி செய்வதற்காக ஆயுத படையினரும் பொலிஸாரும் வழங்கிய ஒத்துழைப்பிற்காக கமால் குணரட்ண அவர்களிற்கு தனது நன்றியை தெரிவித்துள்ளார்.

நாடு அரசியல் ரீதியில் ஸ்திரமற்றதாக்க குழப்பம் மிக்கதாக மாறுவதைத் தடுப்பதற்கு அவசியமான ஆதரவை அவர்கள் வழங்கினார்கள் எனவும் கமல் குணரட்ண தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தீர்வு முயற்சிக்கு துர்சகுனம்

**'சாண் ஏற முழம் சறுக்குவது' என்பார்கள். தென்னிலங்கை பௌத்த, சிங்கள அரசுகளின் விடயத்தில் 'சாண் ஏறாமலேயே முழம் சறுக்குவதுதான்' நடக்கிறது.**

**ஏழரை தசாப்த காலம் புரையோடித் தீர்க்கப்படாமல் இழுபடும் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு, இன்னும் ஒரு மாத காலத்துக்குள் தீர்வு காண காலக்கெடு விதித்துச் செயல்படுகின்றார் இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க.**

**இன்று ஜனவரி 4ஆம் திகதி. சரியாக ஒரு மாதத்தில் – பெப்ரவரி 4ஆம் திகதி – நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்தன்று இனப்பிரச்சினைக்கான தீர்வு யாது – மார்க்கம் என்ன – என்பதை தாம் அறிவிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்று அலப்பறை பண்ணுகிறார் ஜனாதிபதி.**

**நல்லது. அதனைச் செய்வதற்குக் கூடியிருந்து பேசி, இணக்கத்திற்கான மார்க்கத்தைக் கண்டுபிடிப்பதற்கு புதிய சூழலை ஏற்படுத்துங்கள் என்றனர் இனப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்பும் பாதிக்கப்பட்ட தரப்புமான தமிழ் மக்கள்.**

**பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கைவிட்டு, அதனை நீக்கி, அதன் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவித்து, நல்லெண்ண சூழலையும் சமிக்ஞையையும் காட்டுங்கள் என்றனர் அவர்கள்.**

**பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை விலக்குகின்றோம், ஐந்து கைதிகளுக்கு விடுதலை, இன்னும் சில கைதிகளுக்கு மன்னிப்பு என்றெல்லாம் வாய்ப்பந்தல் போட்டார்களே தவிர, ஏதும் செயலில் உருப்படியாக நடக்கவில்லை.**

**அப்படி நடக்காவிட்டாலும் பரவாயில்லை, அவற்றுக்கு மாறாகப் பயங்கரவாதச் சட்டம் புதிது, புதிதாக ஆள்கள் மீது பாய்கிறது. அரசியல் கைதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வேலைதான் களத்தில் நடக்கின்றது.**

**உயிரிழந்த உறவுகளுக்கு அமைதியாக நினைவேந்தும் உரிமை மக்களுக்கு உண்டு, அதை மறுக்கக்கூடாது என்று கொள்கை விளக்கப் பிரகடனங்கள், உபதேசங்கள் செய்கின்றார் நாட்டின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க. ஆனால் அவரின் படைகளோ அதற்குத் தலைகீழாக நடக்கின்றன.**

**2020 இல் கோட்டாபயவின் எதேச்சாதிகார ஆட்சியில், முன்னர் அகிம்சை போரில் – உண்ணாவிரதப் போராட்டத்தில் – காந்திய வழியில் – ஒரு சொட்டு தண்ணீர் கூட அருந்தாமல், அணு அணுவாய்ச் செத்து, சாவைத் தழுவிய தியாக தீபம் திலீபனின் நினைவு தினத்தில் விளக்கேற்றி அவனுக்கு அஞ்சலி செய்த குற்றத்திற்காக 2020 இல் கைது செய்யப்பட்டார் சிவாஜிலிங்கம். சாதாரண சட்டத்தின் கீழேயே பிணையிலும் விடுவிக்கப்பட்டார்.**

**இப்போது அந்த விடயத்திற்காக சிவாஜிலிங்கம் மீது பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கொழும்பில் வழக்குத் தொடுக்கப்பட்டு, வரும் 11ஆம் திகதி நீதிமன்றத்திற்கு வருமாறு கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் அவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருக்கின்றது. அந்தச் சமயத்தில் – அன்றைய தினம் – அவர் நீதிமன்றத்தில் பிரசன்னமானால், அவரும் அரசியல் கைதியாவது நிச்சயம்.**

**அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கைவிடவும் இல்லை, அரசியல் கைதிகளை விடுவிக்கப் போவதுமில்லை. மாறாக, அவர்களின் எண்ணிக்கையைத்தான் அதிகரிக்க போகின்றது.**

**இது, தீர்வுக்கான நல்ல சமிக்ஞை அல்ல, மாறாக துர்சகுனம்.**

# அரசியல் வாதிகள் எவரும் ஊர் பக்கம் வரக்கூடாது!

## வெலிஓயா மக்கள் ஆக்ரோஷம்



விரைவில் தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே, எமக்கான வீதியைப் புனரமைத்து தராமல், அரசியல் வாதிகள் எவரும் ஊர் பக்கம் வரக்கூடாது. அவ்வாறு வந்தால் அடித்து விரட்டுவோம். இவ்வாறு ஹற்றன், வெலிஓயா 22 ஆம் தோட்ட பகுதி மக்கள் எச்சரித்துள்ளனர்.

ஹற்றன், வெலிஓயா 22 ஆம் இலக்க தோட்டத்தில் உள்ள 4 வயது சிறுவன் ஒருவர் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

சுகவீனமுற்றிருந்த சிறுவனை, உரிய நேரத்துக்கு வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு வாகனம் இருக்கவில்லை.

வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் வெளியில் இருந்துகூட வாகனத்தை பெற முடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையிலேயே இதற்கு மேலும் மக்கள் சாவதற்கு இடமளிக்க முடியாது எனவும், வீதியை உடன் புனரமைத்து தருமாறு வலியுறுத்தியும் தோட்ட மக்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) போராட்டத்தில் ஈடுபட்டனர். சிறார்களும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

சுமார் 2 கிலோ மீற்றர் வரையான வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் மழைக்காலங்களில் பாடசாலை மாணவர்கள், உயிரைக் கையில் பிடித்துக் கொண்டே பயணிக்கின்றனர் எனவும், இது தொடர்பில் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

சிறுவனின் மரணத்துக்கு இந்த வீதியும் ஒரு காரணம். இனியும் மக்களை பலிகொடுக்க நாம் தயாரில்லை. எமக்கான வீதி புனரமைக்கப்பட வேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால் அரசியல்வாதிகளை தோட்டத்துக்குள் விட மாட்டோம். எனவும் தோட்ட மக்கள் திட்டவட்டமாகக் குறிப்பிட்டனர்.



# ஒன்லைனூடாக காணி உறுதிப்பத்திரங்கள் பதிவு செய்கின்ற நடவடிக்கைகள் ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 4

ஒன்லைன் ஊடாக காணி உறுதிப் பத்திரங்களை பதிவு செய்யும் நடவடிக்கையை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பதிவாளர் நாயகம் பிரபாத் அபேசிங்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சில தினங்களுக்குள் 07 பதிவாளர் அலுவலகங்களின் ஊடாக இந்த நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கில் சிறுநீரகநோய், குடிநீர் பிரச்சினையை தீர்க்க 50 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்படுமாம்!

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தகவல்

கொழும்பு, ஜன. 04

வடமாகாணத்தில் அந்தப் பிரதேச மக்களின் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தி குடி தண்ணீர் பிரச்சினையை தீர்க்க 50 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்படவுள்ளன என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

இதன்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் தலா 23 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் நிறுவப்பட உள்ளன.

அனைவருக்கும் பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்க வேண்டும் என்ற அரசின் கருத்தின் கீழ் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரையின் பிரகாரம் அந்த அமைச்சின் கீழ் மீள்குடியேற்றப் பிரிவு, சமூக நீர் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

இந்த நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நாள் ஒன்றுக்கு 2 ஆயிரம் லீற்றர் தண்ணீரை முழுவதுமாக சுத்தம் செய்யும் திறனைக் கொண்டுள்ளது என்று மீள் குடியேற்றப் பிரிவு தெரிவிக்கிறது.

நனோ தொழில்நுட்பம் மூலம் நீரைச் சுத்திகரிக்கும் போது அதிக உப்புகளை நீக்குகிறது. நனோ சுத்திகரிப்பு மூலம் நஞ்சுக்கள், பார உலோகங்கள் மற்றும் ஏனைய சேதன இரசாயன உலோகங்கள் அகற்றப்பட்டு நீரின் சுவையும் துர்நாற்றமும் நீக்கப்படும்.

2021 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பு 20 கோடி ரூபாவாகும். நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பின் அமைச்சின் கீழ் செயற்படும் மீள் குடியேற்றப் பிரிவின் இந்தத் திட்டத்தின் சுமார் 60 வீதம் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

கொரோனா வைரஸ் பரவல் மற்றும் நாடு எதிர்கொள்ளும் நெருக்கடிகள் காரணமாக நனோ நீர் சுத்திகரிப்பு நிலையத் திட்டத்தின் கட்டுமானப் பணிகளின் நிறைவு காலதாமதமானது என்றும் அந்த பிரிவு குறிப்பிடுகிறது. விரைவில் இந்தத் திட்டத்தை நிறைவு செய்ய முடியும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக மீள்குடியேற்றப் பிரிவு தெரிவித்தது.

# அதிபர் இடமாற்றத்துக்கு எதிர்ப்பு; யாழ். வரணியில் ஆர்ப்பாட்டம்!

யாழ் – வரணி கரம்பைக்குறிச்சு அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் இடமாற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது,

பெற்றோர்களால் பாடசாலை நுழைவாயிலை மறித்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை பாடசாலைக்கு மாணவர்கள் எவரும் சமுகமளிக்காத நிலையில் ஆசிரியர்கள் மாத்திரம் பாடசாலைக்கு சமுகமளித்திருந்தனர்.

பாடசாலை அதிபர் இடமாற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பவில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுட்ட பெற்றோர் தெரிவித்தனர்.



## முட்டை உற்பத்தியை நிறுத்தப்போவதாக உள்ளூர் உற்பத்தியாளர்கள் எச்சரிக்கை!

முட்டையை இறக்குமதி செய்யும் தீர்மானத்தை அரசாங்கம் முன்னெடுத்தால், தாம் தொழிலில் இருந்து விலக நேரிடும் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.


முட்டை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ அறிவித்தார்.

2022 டிசெம்பரில், முட்டை விலை அதிகரிப்பிற்குத் தீர்வாக, கொழும்பு, கம்பஹாவில் முட்டைகளை 55 ரூபாவுக்கு விற்கும் விசேட திட்டம் அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டது.

அரசாங்கமும் முட்டை உற்பத்தியாளர் சங்கமும் இணைந்து இந்தத் திட்டத்தை கொண்டுவந்தாலும் முட்டைகளை இறக்குமதி உள்ளூர் தொழில்துறைக்கு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையிலேயே முட்டையை இறக்குமதி செய்வது தொடர்பாக இலங்கை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

## போதைப்பொருளற்ற சமூகத்தை உருவாக்கும் போட்டி நிகழ்வு கிளிநொச்சியில் முன்னெடுப்பு!



போதைப்பொருளற்ற சமூகத்தை உருவாக்கும் போட்டி நிகழ்வு ஒன்று கிளிநொச்சி பாரதி மகாவித்தியாலய பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) கிளிநொச்சி பாரதி மகா வித்தியாலய பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ள போட்டி நிகழ்வுக்கான முன்னேற்பாடாக இந்த விழிப்புணர்வு பதாதை தயாரிக்கும் போட்டி இடம்பெற்றுள்ளது. இதற்கமைய முதல் மூன்று வெற்றியாளர்கள் நடுவர்களால் தெரிவு செய்யப்பட்டதோடு மாணவர்கள் தமக்குள் எழுந்த எண்ணக்கருவை பதாதைகள் ஊடாக வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களிற்கான பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி பாடசாலையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நீர் விரயமாகுகின்ற பிரதான இடமாக பாடசாலை வளாகங்கள் அடையாளம்!

நீர் விரயமாகும் பிரதான இடமாக பாடசாலை வளாகங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து நீர் விரயம் ஏற்படும் இடங்களாக அரச அலுவலகங்கள் மற்றும் மத ஸ்தலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

பாடசாலைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு இலவசமாக நீர் விநியோகம் செய்யப்படுவதால் நீர் விரயம் அதிகரித்து காணப்படுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வாறு பல இடங்களில் நீர் விரயமாகுவதனால் ஆண்டு தோறும் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் இழப்பு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மீனவர் ஒருவரின் சடலம் வட்டுக்கோட்டையில் மீட்பு!

யாழ். வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட திருவடிநிலை கடலில் மிதந்து வந்த நிலையில் மீனவர் ஒருவருடைய சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி மீனவர் திங்கட்கிழமை கடற்றொழிலுக்கு சென்ற நிலையில் தண்ணீரில் மூழ்கி நேற்று (புதன்கிழமை) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உறவினர்கள் சடலத்தை வீட்டுக்கு எடுத்துச் செல்ல முற்பட்டவேளை கடற்படையினருக்கும் உறவினர்களுக்கும் இடையே முரண்பாடு தோன்றியது.

அதனையடுத்து அவர்கள் சடலத்தை வீட்டுக்கு எடுத்து சென்றுள்ளனர்.

சுழிபுரம் – காட்டுப்புலம் பகுதியைச் சேர்ந்த கணபதி தவம் (வயது – 58) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# அரசின் வருமானவரி சட்டத்தை உடன் நீக்குக தவறின் தொழிற்சங்கப் போராட்டம் வெடிக்கும்!

## யாழ்.மாவட்ட அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(இ.கலையமுதன்)

அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தியிருக்கின்ற தன்னிச்சையான வருமான வரிக்கொள்கையை நீக்கி வருமான வரிசட்டங்களை சாதாரண முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் தவறும் பட்சத்தில் தொழிற்சங்க போராட்டம் தொடரும் என யாழ்.மாவட்ட அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட அரச வைத்தியர் அதிகாரிகள் சங்கம் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் ஊடக சந்திப்பை நடத்தியபோதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

மேலும் தெரிவிக்கையில் –

இந்த வரிக்கொள்கையின் மூலம் வருடம் ஒன்றுக்கு இரண்டு மாதத்துக்கு மேற்பட்ட வேதனத்தை செலுத்த வேண்டிய கட்டாயத்தில் வைத்தியர்கள் இருக்கின்றனர். இது வைத்திய துறையை மட்டுமல்ல ஏனைய தொழிற்துறையையும் பாதித்துள்ளது.

எவரையும் பாதிக்காத வகையில் வருமான வரிக்கொள்கை நாடாளுமன்றம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

2022 இல் வரிக்கொள்கையின் காரணமாக 500 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறி இருக்கின்றனர். இதனால் மனிதவலு பற்றாக்குறையை வைத்தியதுறையில் மட்டுமல்ல ஏனைய துறைகளிலும் ஏற்படுத்தும் இதனால் மக்கள்தான் பாதிக்கப்படுகின்றனர்.

ஜனாதிபதிக்கும் நாடாளுமன்ற கட்சி தலைவர்களுக்கும் வாய்மூலமாகவும் எழுத்து மூலமாகவும் வரிக்கொள்கை தொடர்பாகத் தெரியப்படுத்தி இருந்தோம். வரிக்கொள்கை தொடர்பான இறுதி வாசிப்பின் போது நாடாளுமன்றம் முன் எதிர்ப்பை தெரிவித்திருந்தோம். அதனை செவிமடுக்காமல் வரிக்கொள்கை நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தது.

எதிர்வரும் காலங்களில் வருமான வரிக் கொள்கையை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதை ஆராயவுள்ளோம். எம்முடைய கோரிக்கையை ஏற்று வருமான வரிசட்டங்களை சாதாரண முறையில் நடைப்முறைபடுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் தொழிற்சங்கப் போராட்டம் தொடரும்.




மேலும் சம்பளம் வழங்கப்படும் திகதிகளை கறுப்பு தினமாகவும் பிரகடனப்படுத்த தீர்மானித்துள்ளோம். – என்றனர்.

# மகநெகும திட்ட தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர் மீதான தாக்குதல் தொடர்பாக இருவர் கைதாகினர்!

மகநெகும திட்டத்தின் தலைவர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஊழியர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுவருடப் பணிகளை ஆரம்பிக்கும் வைபவம் கடந்த திங்கட்கிழமை காலை பேலியகொடையில் உள்ள மகநெகும தலைமையகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அங்கு, தலைவர், பணிப்பாளர் ஆகியோர் விளக்கேற்ற வந்தபோது, ஊழியர்கள், கேக், பால் சாதம், போன்றவற்றால் அவர்களைத் தாக்கினர்.

அத்துடன் அவர்களை வெளியே செல்ல அனுமதிக்காமல் தடுத்து நிறுத்தினர்.

பின்னர் பொலிஸார் தலையிட்டு அவர்களை அலுவலகத்துக்கு வெளியே அழைத்துச் சென்றனர். சம்பவம் தொடர்பில் மகநெகும திட்ட ஊழியர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.






கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியா - சீனா இரு தரப்புகளும் நிலைமையை சீர்செய்து சுமுகமாக்குவதில் விசேட அவதானம்

## பெய்ஜிங்கின் புதிய வெளிவிவகார அமைச்சர் கின் காங் தெரிவிப்பு

**சீனாவின் புதிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்த கருத்துக்கள் குறிப்பிடத்தக்கவை. இந்திய மற்றும் சீன துருப்புக்கள் 31 மாதங்களுக்கும் மேலாக எல்லையில் முட்டுக்கட்டையாக இருக்கும் நேரத்தில் அவை வந்துள்ளன. மேலும், பிரச்சினைக்கு பெய்ஜிங் முன்னுரிமை அளிப்பதாக சீனா குறிப்பிடுவதும் இந்தியாவுக்கு முக்கியமானது.**

கின் காங் தாம் சீனாவின் புதிய வெளியுறவுத்துறை அமைச்சராக பெயரிடப்படுவதற்கு நான்கு நாள்களுக்கு முன்பு தெரிவித்த கருத்துக்களில், இந்தியாவுடனான எல்லைப் பிரச்சினைகள் பற்றி குறிப்பிட்டார்.

மேலும் இரு தரப்பினரும் நிலைமையை எளிதாக்க தயாராக உள்ளனர் என்றும், எல்லைகள் வழியே அமைதியைக் கூட்டாகப் பாதுகாக்கத் தயாராக உள்ளனர் என்றும் கூறினார்.

அமெரிக்காவிற்கான சீனாவின் தூதராக இருந்த குயின், நாட்டின் புதிய வெளியுறவு அமைச்சராக கடந்த வெள்ளிக்கிழமை பெயரிடப்பட்டார். மேலும் ஒரு தசாப்த காலம் பதவியில் இருந்த வாங் யிக்குப் பதிலாக அவர் நியமிக்கப்படுவார்.



புதிய சீன வெளிவிவகார அமைச்சர் கின் காங்.

குயின் இதற்கு முன்பு 2014 மற்றும் 2018 க்கு இடையில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் தலைமை நெறிமுறை அதிகாரியாகப் பணியாற்றியவர்.

டிசம்பர் 26 அன்று, அமெரிக்க இதழான 'நஷனல் இன்ட்ரஸ்ட்'க்கு சீனா எப்படி உலகைப் பார்க்கிறது? என்ற தலைப்பில் ஒரு கட்டுரையில், கின் இந்தியா – சீனா உறவுகளை, சீனா இப்போதைய அந்தஸ்து நிலையை உடைக்க ஆயத்தமாக உள்ளது என்ற கருத்தின் பின்னணியில் குறிப்பிட்டார்.

தைவான் மீதான தற்போதைய நிலையை அமெரிக்கா சவால் செய்ததற்காகவும், தென் சீனக் கடலில் உள்ள நிலையை மாற்றியதற்காக ஜப்பான் மீதும் அவர் குற்றம் சாட்டினார்.

சீனாவின் வளர்ச்சி என்பது அமைதிக்கான வலுவான சக்தியாகும், சிலர் அதை அழைப்பது போல் 'நிலைமையை உடைக்க' தயாராகும் வளரும் சக்தி அல்ல. தைவான் ஜலசந்தி முழுவதும் பதற்றம் சீன நிலப்பரப்பு நிலை வரத்தை உடைத்ததால் உருவாக்கப்பட்டது அல்ல, மாறாக 'தைவான் சுதந்திரம்' பிரிவினைவாதிகள் மற்றும் வெளிப்புற சக்திகள் 'ஒரு சீனா' என்ற நிலையை தொடர்ந்து சவால் செய்வதால் வந்தது என்று கின் எழுதினார்.

“கிழக்கு சீனக் கடலைப் பொறுத்தவரை, பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஜப்பான் தான் டியாயு டாவோவை (பகுதியை) 'தேசியமயமாக்க' முயற்சித்தது, சீனாவிற்கும் ஜப்பானுக்கும் இடையிலான வேறுபாடுகளை



சீன – அமெரிக்கத் தலைவர்கள் சந்திப்பு

ஒதுக்கி வைக்க ஒப்புக்கொண்ட 'நிலையை' மாற்றியது. தென் சீனக் கடலில், பிராந்தியத்திற்கான அர்த்தமுள்ள மற்றும் பயனுள்ள விதிகளுக்கு வழிவகுக்கும் நடத்தை நெறிமுறை குறித்து பிராந்திய நாடுகள் ஆலோசனை நடத்தி வருகின்றன. சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான எல்லைப் பிரச்சினைகளைப் பொறுத்தவரை, இரு தரப்பினரும் நிலைமையை எளிதாக்குவதற்கும், தங்கள் எல்லைகளில் அமைதியை கூட்டாகப் பாதுகாப்பதற்கும் தயாராக உள்ளனர் என்று அவர் எழுதினார்.

ஒக்டோபரில் நடைபெற்ற சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 20 ஆவது தேசிய காங்கிரஸ், உலக அமைதியை நிலைநிறுத்துவதற்கும், பொதுவான வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் சீனா தனது வெளியுறவுக் கொள்கை இலக்குகளுக்கு உறுதிபூண்டுள்ளது என்று கின் தனது கருத்துக்களை வடிவமைத்து எழுதினார். மனித குலத்திற்கான பகிரப்பட்ட எதிர்காலத்துடன் ஒரு சமூகத்தை உருவாக்க அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உலகக் கண்ணோட்டத்தின் இத்தகைய உத்தியோகபூர்வ, வெளிப்படையான அறிவிப்பு, அது உலகத்துடன் ஈடுபடும் விதத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.



சீனா – அமெரிக்க உறவுகள் குறித்து, கின் எழுதினார். மக்கள் உலகை 'ஜனநாயகம் எதிர் எதேச்சதிகாரம் என்ற நோக்கில் பார்க்க விரும்பினால் அவை பிளவு, போட்டி மற்றும் மோதல்கள் நிறைந்த ஒரு உலகத்தையே உருவாக்கும் ஆனால் அவர்கள் உலகைப் பகிரப்பட்ட எதிர்காலத்துடன் கூடிய சமூகமாகப் பார்த்தால், திறந்த மனப்பான்மை, ஒத்துழைப்பு மற்றும் வெற்றி – வெற்றி முடிவுகள் அவர்களின் விருப்பத்தின் பலனாக இருக்கும்.

அவர் எழுதினார் – கடந்த மாதம் பாலியில் ஜனாதிபதி ஜோ பிடனுடனான தனது சந்திப்பில் ஜனாதிபதி ஜி ஜின்பிங் வலியுறுத்தியது போல், இரு நாடுகளும் தங்களை வளர்த்துக் கொள்ளவும், ஒன்றாக செழிக்கவும் உலகம் பெரியளவில் தாராளமானது. சீனா – யு.எஸ். உறவுகள் என்பது பூச்சியத் தொகை விளையாட்டாக இருக்கக் கூடாது. அதில் ஒரு பக்கம் மற்றொன்றை விஞ்சும் அல்லது மற்றவரின் இழப்பில் செழித்து வளரும் நிலையாகவும் அமையக் கூடாது. சீனாவும் அமெரிக்காவும் இப்போது பொதுவான நலன்களைப் பகிர்ந்து கொள்கின்றன, குறைவாக இல்லை. சீனா – அமெரிக்காவில் மனித குலத்திற்கான பகிரப்பட்ட எதிர்காலம் கொண்ட சமூகத்தின் கருத்து இப்படித்தான் இருக்கிறது. உறவுகள்.

உக்ரைனின் நிலைமை குறித்தும் கின் கவலை தெரிவித்தமையோடு, ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையே அமைதிப் பேச்சுக்களுக்கும், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், நேட்டோ மற்றும் ரஷ்யாவிற்கும்




சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது தேசிய மாநாட்டில்........

இடையேயான உரையாடலுக்கும் அழைப்பு விடுத்தார்.

உக்ரைன் நிலைமை குறித்து சீனா மிகவும் கவலை கொண்டுள்ளது. ஆழ்ந்த வருத்தமளிப்பதாக இருந்தாலும், அங்கு நடப்பது சில முக்கியமான படிப்பினைகளை வெளிப்படுத்துகிறது.மோதல்களும் போர்களும் வெற்றியாளர்களை உருவாக்காது. சிக்கலான பிரச்சினைக்கு எளிய தீர்வு இல்லை. முக்கிய நாடுகளுக்கு இடையேயான மோதல் தவிர்க்கப்பட வேண்டும். ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை ஊக்குவித்தல் மற்றும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், நேட்டோ மற்றும் ரஷ்யாவிற்கு இடையிலான உரையாடலை மேம்படுத்துவதே இப்போதைக்கு மிக அவசரமான பணியாகும். நீண்ட காலத்திற்கு, மற்ற நாடுகளின் பாதுகாப்பின்மையின் மீது ஒருவரின் சொந்த பாதுகாப்பை நிலைநிறுத்துவது வேலை செய்யாது என்பதை மக்கள் உணர வேண்டும். ஒரு சமநிலையான, பயனுள்ள மற்றும் நிலையான ஐரோப்பிய பாதுகாப்பு கட்டமைப்பை நிறுவுவது அவசியம். இதைத் தவிர வேறு வழியில்லை என்று அவர் எழுதினார்.

ஒரே உலகில் வசிப்பவர்களாக, நாம் ஒருவருக்கொருவர் செவிசாய்க்க வேண்டும், உலகத்தைப் பற்றிய நமது இடைவெளியைக் குறைக்க வேண்டும், மேலும் பரஸ்பர மரியாதை, அமைதியான சகவாழ்வு மற்றும் வெற்றி – வெற்றி ஒத்துழைப்பின் அடிப்படையில் பழகுவதற்கான வழியை ஆராய வேண்டும் என்று அவர் எழுதினார்.

**(மூலம்: 'த இண்டியன் எக்ஸ்பிரஸ்')**

# ஒரே நாளில் ரூ.7.68 கோடி திருப்பதி உண்டியல் வசூல்!

## ஏழுமலையானுக்குக் கொட்டும் நிதி



திருப்பதி,ஜன.04

வைகுண்ட ஏகாதசியையொட்டி திருப்பதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12.05 மணி அளவில் சிறப்பு பூஜைகள் செய்து சொர்க்கவாசல் திறக்கப்பட்டது. பல்வேறு மாநிலங்களில் இருந்து வந்த முன்னாள் முதல் – மந்திரிகள், அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், நீதிபதிகள், முதன்மைச் செயலாளர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் சொர்க்கவாசல் வழியாக தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். காலை 5 மணி முதல் 6 மணி வரை ஸ்ரீ வாணி அறக்கட்டளை தரிசன டிக்கெட் பெற்ற பக்தர்கள் தரிசனம் செய்தனர்.இதையடுத்து ரூ.300 ஒன்லைன் தரிசன டிக்கெட் மற்றும் இலவச தரிசன டிக்கெட் பெற்றவர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். வரும் 11 ஆம் திகதி வரை தினமும் 80 ஆயிரம் பக்தர்கள் சொர்க்கவாசல் வழியாக தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். இதற்காக ரூ.300 ஒன்லைன் தரிசன டிக்கெட்டில் 20 ஆயிரம் பேரும், இலவச தரிசன டிக்கெட்டில் 50 ஆயிரம் பேரும், ஸ்ரீவாணி அறக்கட்டளையின் சார்பில் 2 ஆயிரம் பேர் என மொத்தம் 8 லட்சம் டிக்கெட்டுகள் விநியோகிக்கப்படுகின்றன. இந்த நிலையில் வைகுண்ட ஏகாதசி முதல் நாளான நேற்று இலவச தரிசன டிக்கெட் மற்றும் பல்வேறு சேவை டிக்கெட்களை பெற்ற 13 ஆயிரம் பக்தர்கள் தரிசனத்திற்கு வரவில்லை. 13 ஆயிரம் பேர் தரிசனத்திற்கு வராததால் தள்ளு முள்ளு இன்றி பக்தர்கள் தரிசனம் செய்தனர். நேற்று நாடு முழுவதிலிருந்து ஏராளமான முக்கிய பிரமுகர்கள் தரிசனம் செய்ததால் முன்பு எப்போதும் இல்லாத வகையில் திருப்பதி வரலாற்றில் முதல்முறையாக ஒரே நாளில் ரூ.7.68 கோடி உண்டியல் வசூலானது. 69,414 பேர் தரிசனம் செய்தனர். 18,612 பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தினர். இதற்கு முன்பு ஒரே நாளில் அதிகபட்சமாக ரூ.6 கோடிக்கு மேல் உண்டியல் வசூலாகியிருந்தது.

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## அழமைகளும் ஆணித்தர பாதைகளும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 231

தலையணை மந்திர நிகழ்ச்சி நிரலில், ஜே.ஆர்.ஜெயவர்த்தனாகவும் சிங்கள பேரினவாதமும் கையாள பட்டிருக்க வேண்டும் என்ற பதிவை அடுத்து, பேசிய நண்பர்களின் கருத்துக்கள், கோடிட்ட வகையில் எதிரும் புதிருமாக இருந்தன.

மூன்று முடிச்சை போட்டு விட்டால், கணவன் இழுத்தபடி எல்லாம் ஆட வேண்டுமா, மனைவிக்கு என்று ஆசைகள், உரிமைகள் இல்லையா? – என ஒரு தரப்பும், அடுத்த தரப்புக்கள், கணவனாகிவிட்டால் நினைத்தபடி நடப்பதா, இந்தியா இழுத்த இழுப்புக்கெல்லாம் ஆடி இருக்க வேண்டுமா? என்றும் கேட்டன.

அந்த அணுகுமுறைகள் பயனுள்ளனவாகியிருக்குமா, பயனற்றவையாகியிருக்குமா என்பவை பேசுவதற்கு காலம் கடந்து விட்டவை.

தமிழ் மக்கள் அறிவற்றவர்கள் அல்லர். அரசியல் புரியாதவர்களும் அல்லர். தங்களுடைய மனங்களில், தங்களது சொந்த வாழ்க்கைகளில், அவர்களது பந்தங்களோடு அவர்கள் கடைப்பிடித்த அனுசரணைகளையும், அவற்றின் பிரதி பலன்களையும் சீர்தூக்கிப் பார்த்து, நடத்திய அரசியல்களால் தாங்கள் எங்கே, எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

இணக்கத்தின் ஊடாக இலங்கையின் விவகாரங்களை, அதில் தமிழ் மக்கள் பிரச்சினைகளையும் உள்ளடக்கி, கையாள இந்தியா எடுத்த தீர்மானங்களுக்கு, அவை ராஜீவ் காந்தியால் மாத்திரம் எடுக்கப்பட்டவை அல்ல. இந்திய அரசின் நிர்வாக துறையும், அதன் அமைச்சர்களும், அதனுடைய சுதந்திர காலத்தில் இருந்தே கடைப்பிடிக்கப்பட்ட கொள்கையின் நடைமுறையாக்கத்தின் வடிவமே அவை.

நேரு, இந்திரா இருந்த ஆட்சிக் காலங்களில் அவர்களதும் அவர்களது ஆட்சிகளுக்கு பலமாகவிருந்த சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபட்டிருந்த தலைவர்களாலும் பிராந்தியத்திலும் சர்வதேசத்திலும் இந்தியாவினுடைய மதிப்பும் கௌரவமும் உயர்ந்தே இருந்தது.

அனேகமான உள்நாட்டு பிரச்சனைகளை திட்டவட்டமாகவும் ஆணித்தரமாகவும் அங்குமிங்கும் ஊசலாடாத முடிவுகளின் பெயரில் இந்திரா காந்தி நடத்திய போது, அதற்கு வியாக்கியானங்கள் இருந்தாலும், எதிர்ப்புகள் எழுந்ததில்லை. பங்களாதசத்தை உருவாக்கிய போது, அமெரிக்கா பாகிஸ்தானுக்கு ஆதரவு தந்து, இந்திய நிலைப்பாட்டை எதிர்த்து நின்ற போதும், அதை நடத்தி இந்திரா உயர்ந்து நின்றார்.

அதேயளவு திட சித்தம் உள்நாட்டின் பிரிவினை கோரிக்கையான காலிஸ்தானுக்கு பஞ்சாபியர்களிடம் இருந்து வந்த போது, பிளவடைந்த காங்கிரஸ் கட்சி, ஜனதா சுதந்திர என்று பழம் பெரும் தலைவர்களால் உருவான கட்சிகள் என அவரது ஆளுமையையும் அதிகாரித்தையும் பாதித்தது அப்படி இருந்தும் அவரது குணாதிசயத்துக் கேற்ப அவர் எடுத்த திண்ணமான முடிவில் தங்கக் கோவிலை தாக்கியது, கடைசியில் அவரது உயிரையும் குடித்தது.

ஆகவே அரசியலில் அதிக அனுபவங்கள் இன்றி பிரதமர் பதவியை பணியேற்ற ராஜீவ், இந்திய நிர்வாக துறைகளின் புத்திமதிகளிலும் அனுசரணையிலும் இந்திராவை போல் அல்லாது, மிதவாதப் போக்கையும் இணக்க பாதைகளையும் கடைப்பிடித்தார். அதேசமயம் சுதந்திரப் போராட்ட பழைய அரசியலில் இருந்து மாறி, இளைஞர் போக்குகளையும், எதிர்பார்ப்புகளையும், பூர்த்தி செய்வதில் இருந்த ஆர்வங்களில் நிர்வாக துறைகளில் புத்திமதிகளில் இருந்து சற்று விலகியே நடந்தார் ராஜீவ். பிரபாகரனையும் மதியுரைஞர் பாலசிங்கத்தையும் எம்.ஜி.ஆரின் புத்திமதியில் பின்னிரவு நேரம் முழுமையான பாதுகாப்புகளும் இன்றி, தனது வீட்டுக்கு அழைத்து, பேச்சுவார்த்தை நடத்தியமை மட்டுமல்லாமல், அவர்களுடன் இருந்து உணவு அருந்தியது, ஒப்பந்தத்தை கையெழுத்திட சென்ற சமயம் சிங்கள சிப்பாய்களால் தாக்கப்பட்ட பொழுது, நாடு திரும்பி மேல் ஆராய்ந்து செயல்படலாம் எனக் கருத்துச் சொல்லப்பட்ட பொழுதும், அதனை ஏற்காது செயல்பட்டமை என்பவை அவர் விரும்பிய புதுயுகப் பாதைகளாக விமர்சிக்கப்பட்டன. ஆனால் நடைமுறைப்படுத்தியது என்னவோ இந்தியாவின் ஆழ ஊறிய உள்நாட்டுக் கொள்கைகளை தான்.


சர்வதேச சட்டமான மக்களுக்கு இருக்கும் சுயநிர்ணய உரிமையை பற்றி இந்திய ஒப்பந்தம் பேசவே இல்லை. இது பெரும்பாலாக தமிழர் தரப்புகளால் விமர்சிக்கப்பட்டது .சுயநிர்ணய அடிப்படையில் தமிழ் மக்களின் விருப்பத்தில் ஒப்பந்தம் ஏற்படுத்தப்படாததால் அதில் உண்மைத்துவம் இல்லை என்ற விவாதங்களும் வைக்கப்பட்டன. அந்த வியாக்கியானத்தில் அவ்வளவு பெறுமதி இல்லாவிட்டாலும், இரு தரப்புகளுமே சுயநிர்ணய உரிமையைப் பற்றி ஒப்பந்தங்களில் பேசவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் இந்திரா காந்தியுடன் நடத்திய பேச்சு காலம் தொட்டு, வட்டுக்கோட்டை தீர்மானம் அதில் பொருந்தியிருந்த இறைமை, சுயநிர்ணய உரிமைகள் பற்றி இந்திரா காந்திக்கும் அவர்களது அதிகாரிகளுக்கும் சமர்ப்பணம் செய்யப்படாமல் இல்லை. அவற்றை அவர்கள் அறியாமலும் இல்லை. யதார்த்த நிலை என்னவென்றால் இரண்டு தரப்புகளுமே அதாவது ஸ்ரீலங்கா – இந்தியா சுயநிர்ணய உரிமையை, முக்கியமாக வெளியக சுயநிர்ணய உரிமையை, ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்கு மேலே போய் ஸ்ரீலங்கா உலக சுயநிர்ணய உரிமையைக் கூட ஆறாம் திருத்தச் சட்டத்தால் நிராகரித்திருந்தது

### சுதந்திர காலத்தில் இருந்து இந்தியாவின் நிலைப்பாடு

காலனித்துவம் உலகெங்கணும் கைவிடப்பட்டு, முடிவுகளுக்கு வந்த காலங்களில் சுதந்திரமடைந்த நாடுகளில் தங்களது ஆதிக்கங்கள் தொடர்வதற்காக காலனித்துவ பிரபுக்கள் விட்டுச் சென்ற பிரச்சினைகளின் அடிப்படைகளில்தான் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடுகளே சர்வதேச சட்டங்களில் இடம்பெற்றன.

காலனித்துவத்தில் இருந்து விடுதலை அடைந்த நாடுகளின் தலைவர்கள், அதிகாரத் தன்மைகளில் முக்கியமாக பிரச்சினைகளை தீர்க்கப்படுவதற்கான மார்க்கங்கள் இருந்தன. அந்த மார்க்கங்களில் காலனித்துவ பிரபுக்கள் தங்களது கைவரிசையை காட்டினார்கள். இலங்கையை பொறுத்த அளவில் சுதந்திர



வல்லபாய் பட்டேல்

நாட்டின் முழு அதிகாரங்களையும் சிங்கள பேரினவாத மக்களிடம் கையளித்து சிறுபான்மையினர் நீதியாக நடத்தப்படுவதற்கான கால்கட்டு சரத்து 29 எனக் கூறிக் காலனித்துவவாதிகள் வெளியேறினார்கள். ஆனால் தமிழர்கள் இறைமையோடு இருந்தவர்கள், அவர்களது இறைமை மீண்டும் கையளிக்கப்பட வேண்டும் என அவர்கள் இன்று போராடுகிறார்கள். சர்வதேசமோ, சுயநிர்ணயத்தின் சட்ட வியாக்கியானத்தை, மேலை நாடுகள் தங்களுக்கு வசதியாக விளங்கப்படுத்துவது போல அது சுதந்திரத்தின் போது எடுக்கப்பட்டிருக்க வேண்டிய கோரிக்கை, அப்பொழுது வைக்கப்படாதது, இப்பொழுது இறைமையுள்ள ஒரு நாட்டின் உறுப்பினர் தனியாகவே விளங்கிக் கொள்கிறது.

இந்தியா என்ற நாட்டினை பிரிட்டானியா எத்தனையோ பல சமஸ்தானங்களை வடக்கிலிருந்து தெற்கு வரை இணைத்துதான் உருவாக்கி இருந்தது.

தமிழ் மக்களின் பகுதிகளும் இறையாண்மையும் எப்படி சிங்கள தேசத்துடன் இணைக்கப்பட்டனவோ அதேபோல ஜம்மு – காஷ்மீர், மன்னர் நிசாம் ஆண்ட ஹைதராபாத், மைசூர், திருவாந்திரம், ஜெய்பூர், உதயாப்பூர், பரோடா போன்ற பல மாநிலங்கள் மன்னர்களால் ஆளப்பட்டு, இறைமை கொண்டவையாக இருந்து அதனைப் பிரித்தானியா கைப்பற்றி இருந்தது. இந்தியாவிற்கு சுதந்திரம் தருவதை இனியும் காலம் தாழ்த்த முடியாது என்ற கட்டம் வந்த போது அதனை மேலும் பிரித்தாளவே காலனித்துவ பிரபுக்கள் – முக்கியமாக அப்பொழுது பிரித்தானியாவின் பிரதமரான சேர் வின்ஸ்டன் சர்ச்சில் திட்டங்கள் தீட்டினார்.

இந்தத் திட்டங்களில் பிறந்ததுதான் இறைமை சார்ந்தது இல்லாதாயினும் பல குழுக்களாக இருந்த இஸ்லாமியர்களை மதவாரியாக தங்களுக்கு என ஒரு தேசத்தை பிரித்தானியா வெலியேறுமுன் கோரி பெற்றுக் கொள்ள, அதன் தலைவர்களிடையே பரப்புதல் செய்து, பின் சுதந்திரத்துக்காக காந்தி, நேருவின் தோளோடு நின்று போரிட்ட முகமது அலி ஜின்னாவே அதற்குத் துணை போய், பாகிஸ்தானை நிறுவினார்.

காந்தி முஸ்லிம்களுக்காக பாகிஸ்தானை விட்டுக் கொடுத்தார் என்பதாலேயே அப்பொழுது இந்துக்களுக்காக இருந்த தீவிரவாத அரசியல் இயக்கத்தின் கோட்சே காந்தியைச் சுட்டுக் கொன்றான்.

பாகிஸ்தான் அமைக்க பிரித்தானியா துணை போனதை கண்டு காங்கிரஸில் வேதனைப்பட்டவர்களும் வெகுஜன எழுச்சி கொண்டு இருந்தவர்களும் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் உள்துறை பாதுகாப்பு அமைச்சராக இருந்த சர்தார் வல்லபாய் பட்டேல். அப்படியான நப்பாசைகளுடன் பிரித்தானிய அரசுடன் பேச்சுவார்த்தைகளுக்கு போன ஒவ்வொரு மாநில அரசருக்கும் இந்தியா அதனை இனிமேல் அனுமதிக்காது எனவும், அப்படி ஏதும் நடைபெற்றால் இந்திய படைகள் அங்கு உள்ளீடு செய்து, எது விதமான சலுகைகளுக்கும் மன்னருக்கு இல்லாத அவரது பிரதேசம் இணைத்து கொள்ளப்படும் என அறிவித்தார். இதற்குப் பின்னணியில் இருந்த மைசூர் மகாராஜா, ஜெய்ப்பூர், உதய்ப்பூர் மன்னர்கள், இந்து சமஸ்தானங்களால் யோசித்தனர். ஆனால் ஹைதராபாத் பெரும்பான்மை இந்துக்கள் ஆனாலும் அதன் மன்னர் பெரும் சொத்துக்கள் கொண்ட முஸ்லிம் மன்னர் நிசாம். பாகிஸ்தான் ஏற்படுத்திய நம்பிக்கையில் அதன் அனுசரணையில் தனது பகுதியை கிழக்குப் பாகிஸ்தான் போன்று பாகிஸ்தானுடன் இணைக்க விரும்பினார்.

ஆனால் ஆணித்தரமாக சர்தார் வல்லபாய் பட்டேல் மன்னர் நிசாமுக்குத் தந்த செய்திகளிலும் ஏற்படுத்தப்பட்ட ராணுவ நடவடிக்கைகளிலும் தனது கஜானாவை காப்பாற்றிக் கொள்ள மன்னர் நிஷாம் ஹைதராபாத்ச்சி இந்தியாவின் மாநிலம் ஆக்கினார்.

அதுபோல் சிக்கலாக இருந்த மாநிலங்கள் ஜம்முவும் காஷ்மீரமும். இவை பெரும்பான்மை முஸ்லிம்கள் கொண்டவை. ஆனால் சுதந்திர காலத்தில் ஆட்சியில் இருந்த மன்னர்கள் இந்துவானதால் தனது பாதுகாப்புகளுக்காக இந்தியாவுடன் இணைய விரும்பினார். ஆனால் மக்களோ இஸ்லாமிய பாகிஸ்தானுடன் இணைய விரும்பினார்கள். ஆனால் வல்லபாய் பட்டேல் எந்த வாக்கெடுப்புக்கோ விடுப்புகோ விடவில்லை. மன்னரோடான பேச்சுவார்த்தைகளில் ஜம்மு காஷ்மீர் பிரதேசங்கள் இந்தியாவுடன் இணைக்கப்பட்டன. இன்றுவரை இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமான சர்வதேச பிரச்சனை ஜம்மு காஷ்மீரும் அங்கு வாழும் மக்களின் சுயநிர்ணய உரிமையும்தான். சர்வதேச எங்கே நிற்கிறது? பழையபடி, இந்தியாவின் ஆளுமைகளில் காலனித்துவம் இறந்த காலத்தில் முடிந்துவிட்ட உள்நாட்டு பிரச்சினை என்ற வியாக்கியானத்தை வழிமொழிகிறது.

(வளரும்....)

## யாழ். - கொழும்பு ரயில் ...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் யாழ் – கொழும்பு வழித்தடத்தில் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட 33 பஸ்கள் பயணிகளுக்கான கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தமது சேவையை இடை நிறுத்தியிருந்தனர். இப்பஸ்களை இயக்குவதற்கும், தற்போது ஆசனப்பதிவுகளை மேற்கொள்ளும் உரிமையாளர்களின் ஊடாக அவற்றிற்கான ஆசனப் பதிவுகளை மேற்கொள்வதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இ.போ.ச மற்றும் தனியார் பஸ்கள் யாழ்ப்பாணம் – அனுராதபுரம் மற்றும் வவுனியா – அனுராதபுரம் ஆகிய வழிகளில் பயணிகளின் கேள்வி அதிகரிப்பிற்கு ஏற்ப தொடர்ச்சியாக சேவையாற்ற முன்வந்துள்ளன.

வடமாகாணத்தில் மாவட்டங்களிற்கு இடையேயான சேவைக்கு அனுமதிப்பத்திரம் பெற்று வருமானக்குறைவு காரணமாக தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடாமல் 25 பஸ்கள் உள்ளன. தேவை ஏற்படும் பட்சத்தில் பஸ்களிற்கும் தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்கி அவற்றையும் சேவையில் ஈடுபடுத்துவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பயணிகள் தமக்கு தேவையான ஆசனப் பதிவுகளை மேற்கொள்வதற்காக, ஏற்கனவே உள்ள ஆசனப்பதிவு உரிமையாளர்களின் ஊடாக வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆசனப்பதிவுளை மேற்கொள்வதற்கான தொடர்பு இலக்கங்கள் பொது மக்களுக்கு பத்திரிகைகள் ஊடாக அறிவிக்கப்படும். அத்தோடு யாழ் மத்தியபஸ்நிலையத்திலும்காட்சிப்படுத்தப்படும்.

இந்த ஒழுங்குகளுடன் தேவைக்கு ஏற்றவாறு மேலதிக ஒழுங்கு வசதிகள் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு யோ.நோபெட் ரவிச்சந்திரன் – போக்குவரத்து உத்தியோகத்தர் - 0772385784, சி.சித்ராங்கன் - பஸ் நிலைய பொறுப்பதிகாரி - யாழ்ப்பாணம் - 0765378432, ஈ.கோபிதன் – பஸ்6 நிலைய பொறுப்பதிகாரி–வவுனியா–0779276242 ஆகியோரை தொடர்புகொள்ள முடியும். – என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபை பொது முகாமையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஆடைத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொக்கல சுதந்திர வர்த்தக வலயத்தின் ஊழியர்கள் குழுவொன்றே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் இமதுவ, அஹங்கம, களுகல மற்றும் கராபிட்டிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## பொலிஸில் 2ஆம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மா அதிபர் நந்தன முனசிங்க ஓய்வு பெற்றமையை அடுத்து, பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவின் பரிந்துரையின் பேரில் பொது பாதுகாப்பு அமைச்சு மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளரினால் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபராக நிலாந்த ஜயவர்தன நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவராக இருந்த சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நிலாந்த ஜயவர்தன இலங்கை பொலிஸ்துறையில் பொலிஸ் மா அதிபருக்கு அடுத்து இரண்டாவது உயர் அதிகாரி ஆவார்.

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் அப்போதைய பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிரான 2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு வழக்கில் நிலாந்த ஜயவர்தன முக்கிய சாட்சியாக இருந்தார்.

## மட்டு. தரவை துயிலும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் முத்தாய்ப்பாக துயிலும் இல்லத்தில் இராணுவ புலனாய்வாளர்களினால் திட்டமிடப்பட்ட வகையில் சில நடவடிக்கைகள் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது.

இதனைக் கண்டிக்கும் முகமாக இன்று மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராக மக்கள், அரசியல்வாதிகள் என அனைவரும் அதிகளவில் பங்கெடுக்க வேண்டும் என சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## விமானப்படையின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீட்டிக்கப்பட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

## சிகரெட், மதுபானம் வரி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி 90 ரூபாவாக இருந்த சிகரெட் ஒன்றின் புதிய விலை 105 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

85 ரூபாவாக இருந்த சிகரெட்டின் புதிய விலை 100 ரூபாவாகும்.

70 ரூபாயாக இருந்த சிகரெட்டின் புதிய விலை 80 ரூபாயாக உயரும்.

மேலும் 60 ரூபாவுக்கு விற்கப்பட்ட சிகரெட்டின் புதிய விலை 70 ரூபாவாக அதிகரிக்கப்படுகின்றது.

இதேவேளை, 15 ரூபாவாக இருந்த 60 மில்லிமீற்றருக்கு மிகாத சிகரெட்டின் விலை 24 ரூபாவாக அதிகரிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## ஆஷூ மாரசிங்கவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாட்டுக்கு அமைய தான் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டால், பிணை அளிக்குமாறு கோரி முன் பிணை மனுவொன்றினை தாக்கல் செய்துள்ளார்.

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் அவர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

பேராசிரியர் ஆஷூ மாரசிங்க செல்லப் பிராணியான நாயை பாலியல் ரீதியாக துன்புறுத்தினார் எனக் கூறப்படும் வீடியோ பதிவு ஆதர்ா கரந்தன மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர ஆகியோரால் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்ட பின்னர் வைரலாகியுள்ளது.

இந்நிலையில், ஊடகங்களுக்கு அளிக்கப்பட்ட அறிக்கைகள் முற்றிலும் பொய்யானவை என்றும், இதற்காக செம்மைப்படுத்தப்பட்ட காணொலி பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஆஷூ மாரசிங்க செய்த முறைப்பாட்டின் பேரில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தன்னைக் கைது செய்ய முயற்சிப்பதாக ஆதர்ா கரந்தன தனது முன் பிணை மனுவில் தெரிவித்துள்ளார்.

இந்த மனு நேற்று செவ்வாய்கிழமை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது.


இதன் போது, சி.ஐ.டி. பணிப்பாளர் மற்றும் கணினி குற்றப்பிரிவின் பொறுப்பதிகாரி ஆகியோரை எதிர்வரும் ஜனவரி 10 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு பிரதான நீதிவான் உத்தரவிட்டார்.



காலைக்கதிர் Kalaikkathir

# கஞ்சாவை சட்டபூர்வமாக்கினால் நினைத்துப் பார்க்க முடியாதளவிற்கு தொழில்வாய்ப்புகளை உருவாக்கலாம்!

## அழுத்திக் கூறுகின்றார் டயனா கமகே



வீதி கடைகளில் விற்பதற்காகவும், அனைவரும் வாங்கி பயன்படுத்துவதற்காகவும் கஞ்சாவை சட்டபூர்வமாக்குமாறு கோரவில்லை. வர்த்தக பயிராக அறிமுகப்படுத்துமாறு கோரியுள்ளேன்.

பயன்படுத்துபவர்கள் பயன்படுத்துவார்கள், கஞ்சாவை சட்டபூர்வமாக்கினால் நினைத்து பார்க்க முடியாத அளவிற்கு தொழில் வாய்ப்புக்களை உருவாக்கலாம். தவறான மற்றும் முட்டாள்தனமான சிந்தனைகளில் இருந்து வெளிவரும் வரை இந்த நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது என சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில்மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறையால் நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளது. டொலர் நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் வெளிநாட்டு முதலீடுகளை நாட்டுக்குக் கொண்டுவரும் திட்டங்களை முன்வைக்கும் போது ஒரு சில அரச அதிகாரிகள் அரசியல் நிலைப்பாட்டை முன்னிலைப்படுத்தி, அந்தத் திட்டங்களுக்கு எதிராக செயற்படுகிறார்கள்.

வங்குரோத்து நிலை உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் வெளிநாட்டு முதலீடுகள் தடைப்பட்டுள்ளன. தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அரச தரப்பினர் அரசியல் நோக்கங்களை ஒரு புறம் வைத்து விட்டு நாட்டுக்காக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். நாடு என்பதொன்று மிகுதியாக இருந்தால் தான் அனைவரும் அரசியல் செய்யமுடியும்.

தேர்தல் நடத்தும் நிலையில் நாட்டின் நிதி நிலைமை இல்லை. நிதி நெருக்கடிக்கு மத்தியில் தேர்தலை நடத்தினால் பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடையும். அதன் தாக்கத்தையும் நாட்டு மக்கள் எதிர்கொள்ள வேண்டும். நாட்டு மக்கள் தேர்தலைக் கோரவில்லை. எதிர்த்தரப்பினர் மாத்திரம் தேர்தலைக் கோருகிறார்கள்.

தூர நோக்கமற்ற கொள்கை இல்லாத காரணத்தால் மின்சாரம், சுகாதாரம், வலுத்துறை ஆகிய துறைகளில் பல பிரச்சினைகளை தற்போது எதிர்கொள்ள வேண்டியுள்ளது. மின்சாரம், நீர், எரிபொருள் உள்ளிட்ட சேவைகளின் நெருக்கடிகளை எதிர்கொள்ள எந்நிலையிலும் தயாராக இருக்க வேண்டும்.

வெளிநாட்டு கையிருப்பு பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் கஞ்சா பயிர்செய்கைளை சட்டபூர்வமாக்குமாறு நான் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் ஒரு சில அரச அதிகாரிகள் தவறான கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளார்கள். ஒருசில அரச அதிகாரிகள் தான் நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியுள்ளார்கள். சேறு பூசல்களால் என்னை வீழ்த்த முடியாது. எனது பயணத்தை நான் தொடர்வேன்.

வீதிக் கடைகளில் விற்பதற்காகவும், அனைவரும் வாங்கி பயன்படுத்துவதற்காகவும் கஞ்சாவை சட்டப்பூர்வமாக்குமாறு கோரவில்லை, வர்த்தகப் பயிராக அறிமுகப்படுத்துமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தினேன். கஞ்சாவைப் பயன்படுத்துபவர்கள் பயன்படுத்துவார்கள், பயன்படுத்தாதவர்கள் பயன்படுத்த மாட்டார்கள். நாட்டு மக்கள் அனைவரும் சிகரெட் பாவிக்கவில்லை, அதுபோல் தான் இதுவும்.

கஞ்சாவை சட்டபூர்வமாக்கினால் நினைத்து பார்க்காத தொழில் வாய்ப்புக்களை உருவாக்கலாம். இதனூடாக பல உற்பத்திகளை உருவாக்கலாம். இலங்கை மக்களின் வாழ்க்கையுடன் கஞ்சா தொடர்புபட்டுள்ளது. ஆதிகாலத்தில் இலங்கையர்கள் கஞ்சாவை உணவாக உட்கொண்டதுடன், புகைத்தலுக்காகப் பயன்படுத்தியுள்ளார்கள். தவறான சிந்தனைகள் மற்றும் முட்டாள்தனமான கருத்துக்களில் இருந்து வெளிவரும் வரை இந்த நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது. – என்றார்.

# நாணய நிதிய உதவி இழுபறிக்கு காரணம் ஸ்திரமற்ற அரசாங்கமே!

## முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டு



நாட்டில் தற்போதுள்ள அரசாங்கம் ஸ்திரமற்றது என்பதன் காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் இழுபறி நிலையிலேயே உள்ளன.

எனவே அரசாங்கம் யதார்த்தத்தை உணர்ந்து தேர்தலை நடத்தி, மக்கள் விரும்பும் அரசாங்கத்தை அமைப்பதற்கு உதவ வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில்இடம்பெற்றஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கடந்த ஆண்டை விட இவ்வாண்டு 68 சதவீதத்தால் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்குமத்தியில்மீண்டும்மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மக்கள் மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்கும் ஆண்டாகவே இவ்வாண்டு அமையவுள்ளது. அரசியல்தலைவர்களால் எடுக்கப்பட்ட தவறான தீர்மானங்களே இலங்கை மின்சாரசபை நஷ்டத்தில் செல்கின்றமைக்குப்பிரதானகாரணியாகும். இதனை மக்கள் மீது சுமத்துவதற்கு அனுமதிக்க முடியாது.

கடந்த ஓகஸ்டில் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டதையடுத்து மின்சார சபை பாரிய இலாபமீட்டியுள்ளது. எனினும் அதன் பின்னர் மின்சாரத்துக்கான கேள்வி குறைவடைந்துள்ளது.

இவ்வாறு கேள்வியும் , பயன்பாடும் குறைவடைந்துள்ள நிலையில் எதற்காக கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது? இது தொடர்பில் அமைச்சு தெளிவுபடுத்த வேண்டும்.

எதிர்கால திட்டமிடல் இன்றி அரச ஊழியர்கள் ஓய்வு பெற வேண்டும் என்று கூறப்பட்டமையால், இன்றுரயில்சேவைக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் இது தொடர்பில் முன்னரே அறிந்திருக்கவில்லையா? நாட்டைப் பற்றிய சிறிதளவும் சிந்தனையற்ற இந்த அரசாங்கத்துக்கு சர்வதேச நாணய நிதியம் எவ்வாறு உதவும்?

இந்தஅரசாங்கம்ஸ்திரமற்றதுஎன்பதன் காரணமாகவேசர்வதேசநாணயநிதியத்தின் உதவிகள் கிடைக்கப் பெறாமலுள்ளன. எனவே அரசாங்கம் யதார்த்தத்தை உணர்ந்து தேர்தலை நடத்தி, மக்கள் விரும்பும் அரசாங்கத்தை அமைப்பதற்கு உதவ வேண்டும். – என்றார்.

# மக்கள் எத்தகைய அரசியல் தீர்மானங்களை எடுத்தாலும் சரியான திட்டம் அமுலாகவேண்டும்!

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு



நாட்டுக்குத் தேவையான வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

மக்கள் எத்தகைய அரசியல் தீர்மானங்களை எடுத்தாலும் அதனை மேற்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்றும் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சில் புத்தாண்டுக்கான பணிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# அம்பாந்தோட்டை – லுனுகம்வெஹரவில் புதையல் தோண்டிய ஐந்து பேர் கைதாகினர்

அம்பாந்தோட்டை – லுனுகம்வெஹர பகுதியில் புதையல் தோண்டிய ஐவர் ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மேற்படி பகுதியில் புதையல் தோண்டப்படுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து, லுனுகம் வெஹர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரலிஹெல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது புதையல் தோண்டுவதற்கு முயற்சித்துக் கொண்டிருந்த ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான ஐந்து பேரும் 25 - 45 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் அவர்கள் வீரவில, வீரகெட்டிய, வலஸ்முல்ல, மெதமுலன, திஸ்ஸமஹாராம பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் திஸ்ஸமஹாராம நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். இந்த விடயம் தொடர்பாக லுனுகம்வெஹர பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பஸ்களுக்கு தீ வைப்பதன் மூலம் ஒருவர் தலைவர் ஆக முடியாது!

## சரத் பொன்சேகா இடித்துரைப்பு



பஸ்களை ஓட்டுவதன் மூலமோ அல்லது பஸ்களுக்கு தீ வைப்பதன் மூலமோ ஒருவர் தலைவனாக முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பொன்றில் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

பஸ்களை ஓட்டுவது தலைவர் ஆவதற்கான தகுதி அல்ல. சஜித் பிரேமதாஸ, ஒரு பஸ்ஸை நன்கொடையாக அளித்து அதை ஓட்டுவதன் மூலம் ஓரளவு திருப்தி அடைய முடியும்.

இந்நிலையில் பஸ்களை ஓட்டுவதன் மூலமோ அல்லது பஸ்களுக்கு தீ வைப்பதன் மூலமோ ஒருவர் தலைவர் ஆக முடியாது.

இந்த அரசியல் கலாசாரம் மாற்றப்பட வேண்டும் என்பதே தனது தனிப்பட்ட கருத்து எனத் தெரிவித்துள்ளார்.

# கடமை நேரங்களில் சமூக வலைத்தளங்கள் பயன்படுத்தும் அரச ஊழியருக்கு எச்சரிக்கை!




அலுவலக நேரத்தில் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தும் போது அரச ஊழியர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹபுஹின்ன தெரிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டு பொது நிர்வாக அமைச்சின் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பெரும்பாலான அரச ஊழியர்கள் அலுவலகங்களில் பேஸ்புக், வட்ஸ்அப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் இருப்பதை அவதானிக்க முடிவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமூக வலைத்தளங்களின் பயன்பாட்டைக் குறைத்து, அலுவலக நேரங்களில் மக்களுக்கான சேவைகளை முன்னெடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.01.2023இல் வெளியிடப்பெற்றது.